**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட நூலின் அளவு, பாடத் திட்டங்களினுடைய அளவைப் பொறுத்தது.

**திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாடநூல் நிறுவனத்திற்காக தனியான அச்சு இயந்திரங்கள் அமைக்கின்ற உத்தேசம் அரசிற்கு இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய ஒரு செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

### அரசு மேல்நிலைப் பள்ளிகள்.

**191—(*வினா எண் 11100) திருமதி தா. இராசாம்பாள்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர் பயிற்சி வகுப்புகள் எந்த அடிப்படையில் தொடங்க அனுமதிக்கப்படுகிறது?

(ஆ) அவற்றில் மாணவர்கள் சேர்க்கை எவ்வாறு நடத்தப்படுகிறது?

(இ) எல்லா கல்வி மாவட்டங்களிலும் பரவலாக இந்த வகுப்புகள் தொடங்கப்பட்டு இருக்கின்றனவா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள இடவசதி, தளவாடங்கள், உபகரணங்கள், எம்.எட். பட்டம் பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு கற்பிக்கிற வசதி பொது மக்களின் ஆதரவு, தலைமையாசிரியர்களின் முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் மேல்நிலை வகுப்பில் தொழிற்பாடமாக 'இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்பு' அனுமதிக்கப்படுகிறது.

(ஆ) (1) 15-லிருந்து 25 வரையிலான வயது வரம்பு கொண்ட பெண்கள் மட்டுமே சேர முடிகிற இவ்வகுப்பில், 25 மாணவிகள், பொதுவான இட ஒதுக்கீட்டு விதியின்படி, சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். அந்தந்த ஆண்டின் ஜூலை 31-ல், வயது கணக்கிடப்படும்.

1987 மார்ச் 26]

(2) பத்தாம் வகுப்பில் மொத்தத்தில் 60 சதவீதத்திற்கு குறையாமலும் மொழிப் பாடங்களில் 50 சதவீதத்திற்கு குறையாமலும் மதிப்பெண் பெற்றவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். 1986-87 கல்வி ஆண்டில் சேர ஆதி திராவிடர்/பழங்குடி இனத்தவர்கள் 10 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தால் போதும்.

(3) ஏற்கெனவே பிளஸ் 2 தேர்ச்சி பெற்றவர்களும், மீண்டும் இவ்வகுப்பில் சேரலாம். ஆனால் ஆதி திராவிடர்/பழங்குடி இனத்தாரை தவிர மற்றவர்கள் மேற்கண் மதிப்பெண் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

(4) இது தவிர ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் பின்பற்றப்படுகிற பொது விதிகள் அனைத்தும் இதற்கும் பின்பற்றப்படும்.

(இ) ஆம்.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த ஆசிரியா பயிற்சி வகுப்பை மேல்நிலைப் பள்ளியிலே துவங்குவதற்கு எல்லா விதமான தகுதிகள், வயது வரம்பிலிருந்து, பள்ளிக்கூடத்தில் இட வசதி வரை தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த அளவில், மாவட்டத்திலே இருக்கிற அரசு மேல்நிலைப் பள்ளிகளில், 100க்கு 100 விழுக்காடு மாணவர்கள் வெற்றி பெறுகிற பள்ளிக்கு முதலிடம் தந்து, இந்த பயிற்சி வகுப்புகளை அங்கே நடத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும், 1985-86 ஆம் ஆண்டில் 36 பள்ளிக்கூடங்களுக்கும், 1986-87 ஆம் ஆண்டில் 16 பள்ளிக்கூடங்களுக்கும் அந்த அனுமதி தரப்பட்டிருக்கிறது. நிதிநிலைக்கேற்ப, நடப்பாண்டில் அதைப் பரிசீலிக்கலாம் என அரசு கருதுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையையும் அரசு கருத்திலே கொள்ளும்.